Regd. No. M. 4593. "KUDI ARASU" 12 பக்கங்கள்

# குடி அரசு

Estd. 1924.

வருட சந்தா ரூ. 5. சனி வெளியீடு. தனிப்பிரதி விலை ரூ. 0-1-6

மாலை 17 } ஈரோடு, 23-9-1944 புரட்டாசி-மீ 8உ { மலர் 50

## பாரதி விழா

(மணியம்மை)

என் அருமை திராவிட மக்களே நீங்கள் இம்மாதம் நடந்த பாரதி விழாவில் சிலர் கலந்து கொண்டீர்கள். சிலர் நீங்களே விழாக் கொண்டாட்டத்தை நடத்தினீர்கள்.

உங்களுக்கு பாரதி திராவிடரா ஆரியரா என்பது தெரியவில்லை. பாரதி ஆரியப் பற்று உள்ளவரா திராவிடப் பற்று உள்ளவரா என்பதும் தெரிந்து கொள்ள முடியவில்லை, தீபாவளி, கிருஷ்ண ஜயந்தி, ராமநவமி, சமணர் கழுவேற்றப்பட்ட உற்சவம் ஆகியவைகள் போல் பாரதி விழாவும் கொண்டாடினீர்கள்.

பாரதியின் திராவிடப் பற்றும், ஒப்ப நோக்கவும் கீழ்வரும் அவரது பாட்டுகளில் காணப்படும் குறிப்புகளிலிருந்து உணர்ந்து பாருங்கள்.

பிறகும், "அப்படித்தான் செய்வோம் நீயார் கேள்ப்பது"

என்றால் உங்களுக்கு வேறு யார் தான் மான உணர்ச்சி அளிக்க முடியும். பாரதியின் உள் நிலைமை தெரிய அவரது பாடல்களை சற்று கூர்ந்து பாருங்கள்.

பாரதியின் நாட்டுப் பற்று

"உன்னத ஆரியநாடெங்கள்
நாடே"

பாரதியின் இனப்பற்று

"முன்னையிலங்கை அரக்கர் அழிய
முடித்த வில் யாருடைய வில்"
"ஆரிய ராணியின் வில்"
"ஆரிய ராணியின் சொல்"
"ஆரிய தேவியின் தோள்"

பாரதியின் நாடு

"வானாறு பேரிமய
வெற்புமுதற் பெண்குமரி
ஈறாகும் ஆரியநாடென்றேயறி"

பாரதியின் மகிழ்ச்சி

"ஆரிய காட்சி போனதன்றோ"

பாரதியாரின் நாட்டுப் பெருமை

"ஆதிமறை தோன்றியவாரிய நாடே"

பாரதியின் கடவுள் (இந்திரனை தேவர்கள் வேண்டுவது போலவே) துதி (கிருஷ்ணன்)

"ஆரியர் தம் தர்மநிலை
ஆதரிப்பான்"
"ஆரியர் பாழாகா தருமறையின்
உண்மை தந்த"
"எங்களாரிய பூமியெனும்
பயிர் மங்களம்பெற"
"ஆரியர் வாழ்வினை
ஆதரிப்போனே"
"ஆரிய நீயுநின் அறமறந்தாயோ"
"வெஞ்செயலரக்கரை
வீட்டிடுவோனே"
"ஆரியர் கோனே"

பாரதியாரின் மொழிப்பற்று
(ஆங்கிலம் பற்றி)

"ஆரியர்க்கிங்கருவருப்பானதை"

பாரதி தமிழ்ப்பற்று

"ஆதிசிவன் பெற்றுவிட்டான்
என்னை ஆரிய மைந்தன்
அகத்தியனென்றோர்
வேதியன் கண்டு.........
இலக்கணஞ்செய்து கொடுத்தான்"
"ஆன்ற மொழிகளினுள்ளே உயர்
ஆரியத்திற்கு நிகரென வாழ்ந்தேன்"

பாரதியாரின் ஆசை

"ஆரிய நாட்டினர் ஆண்மை
யோடியற்றும் சீரிய முயற்சிகள்"

என்றெல்லாம் வெளுத்துவாங்கி இருக்கிறார்.

நாட்டுப்பற்று, இனப்பற்று, மொழிப்பற்று, கலைப்பற்று, கடவுள்பற்று ஆகியவைகளை பாரதி பாடல் சுவைப்போர்களே பாரதியாரின் B பாவத்தை கன்றாய் சுவையுங்கள்.

"தமிழருக்கு மானமிருந்தால் தமிழ் நாடும், தமிழ்மொழியும் இவ்விழிவு நிலையில் இருக்குமா? இங்கு ஆரியர் ஆதிக்கம் இவ்வுயர் நிலையில் இருக்குமா?

## தஞ்சை மாவட்ட திராவிட மாணவர் மாநாடு

26-6-44 செவ்வாய்க்கிழமை காலை தமிழ்ச்சங்கக் கட்டிடத்தில் நடைபெறும்.

மாநாட்டுத் தலைவர்: தோழர் புரட்சிக் கவி பாரதிதாசன் அவர்கள்.

மாநாட்டுத் திறப்பாளர்: திராவிடர் கழகத் தலைவர் பெரியார் ஈ. வெ. ராமசாமி.

மற்றும் சி. என். அண்ணாதுரை, இரா. நெடுஞ்செழியன், சி. பி. சின்னராசு, ஜனார்த்தனம், விருதுநகர் ஆசைத்தம்பி, என். தங்கமணிராசன், கே கே. நீலமேகம், அன்பழகன், மற்றும் மாணவத் தோழர்களும் திராவிடத் தோழர்களும் கலந்து கொள்வார்கள்.

வரவேற்புக் கழகத் தலைவர்:
பி. ஜி. பாண்டியன்,
காரியதரிசி: டி. கே. எஸ். பாலன்,
விளம்பர அதிகாரிகள்:
பி. ஆர். சாமிநாதன்,
வி. சின்னையன்,
ஒலிபெருக்கி அமைக்கப்படும்.

## பேரளத்தில் சீதா கல்யாணத்தில் கேள்வி

பேரளம்: இவ்வூர் கடைத்தெருவில் வலங்கைமான் ராமய்யா பாகவதர் அவர்களால் சீதா கல்யாணம் கதை நடந்தது. நமது தோழர்களால் இரண்டு கேள்விகள் கேட்கப்பட்டது. பாகவதர், கேள்விகள் அறிவுக்குப் பொருத்தமானவைகள் தான் என்றும் தன்னுடைய சீவனோபாயத்திற்காக கதை செய்வதாகவும், மிக பரிதாபமாகப் பதிலளித்தார்.

## கீவளூர் தோழர்களுக்கு

கீவளூர் ஜஸ்டிஸ் கோட்டை யென்று பெயர் வாய்ந்த ஊர் அத்தகைய ஊரில் சேலம் மாநாட்டுத் தீர்மானப்படி கழகம் நிறுவுதல், அங்கத்தினர்கள் சேர்ப்பதும் ஆகியவும் அவசரமுமான காரியமாகும். இதற்கு தோழர் ஆர். வி. ராஜன் அவர்கள் ஆவன செய்வார்; விபரம் வேண்டுவோர் கீவளூர், தோழர் ம. கு. பிச்சையாவுக்கு எழுதும்படி கோரப்படுகிறது.

# தெ. இ. ரயில்வே ஊழியர் சங்க மாநாடு

## சென்னை பத்திரிகைகளின் கூற்றுக்கு மறுப்பு

திருச்சி, செப். 12—

31-8-44-ல் கோயம்பத்தூரில் நடைபெற்ற தென்னிந்திய இரயில்வே ஊழியர் சங்கத்தின் இரண்டாவது வருடாந்திர மாநாட்டின் இரண்டாம் நாள் நடவடிக்கையைப் பற்றி 3-9-44-ல் சென்னைத் தினசரிகளில் வெளிவந்த செய்திகள் உண்மையற்றதும் திரிபுடைத்ததுமாகும். ஆதலின் மாநாட்டின் பிரதிநிதிகளாகிய நாங்கள் பொது மக்களும் பிறரும் உண்மையை உணரும் பொருட்டு இவ்வறிக்கை வெளியிடுகிறோம்.

"மாநாட்டின் இரண்டாம் நாள் நடவடிக்கை ஆரம்பமானது. மாநாட்டின் தலைவர் தோழர் ஜமுனாதாஸ் மேத்தா அவர்கள் (அகில இந்திய ரயில்வே தொழிலாளர் சம்மேளனத்தின் தலைவர்) தீர்மானங்களை ஒன்றன்பின் ஒன்றாக வாசித்து பிரதிநிதிகளை 'ஓட்டு' கொடுத்து தீர்மானிக்கும்படி கேட்டுக் கொண்டார். அப்படிச் செய்யும்போது அகில இந்திய ரயில் தொழிலாளர் சம்மேளனப் பொது செயலாளர் தோழர் எஸ். குருசாமியின் தூண்டுதலால், வேண்டுமென்றே நான்காவது தீர்மானத்தைப் படிக்காமல் விடுத்து மேல் தொடங்கினார். அத்தீர்மானம் சம்பள உயர்வுக்கும், மேல் உத்தியோகங்கட்கும் வகுப்புவாரி பிரதிநிதித்துவக் கொள்கையைக் கையாளவேண்டுமென்பது. ஆனால் எங்களில் ஒருவர் அத்தீர்மானத்தின் நகல் ஒன்றை மேத்தாவிடம் தந்து படிக்கும்படி கேட்டுக் கொண்டபோது அத்தீர்மானம் தன்னிடம் முதலில் தந்த 'லிஸ்டில்' இல்லை என்றார். பின் அந்த பிரதிநிதி அந்த 'லிஸ்டை' வாங்கி அதில் அத்தீர்மானம் இருப்பதை எடுத்துக் காட்டியதும், நான் அதைப் படிக்கமுடியாதென தோழர் மேத்தா சொன்னதோடு அவர் செய்கையை ஆட்சேபித்த அப்பிரதிநிதியை உட்காரும்படியும் உத்தரவிட்டார். இந்த அவருடைய சர்வாதிகார செய்கையை நாங்கள் அனைவரும் எதிர்த்துக் கண்டித்துவிட்டு பின் மாநாட்டின் நிகழ்ச்சியில் பங்கு கொள்ள விருப்பமின்றி வெளியேற முடிவுசெய்தோம். ஆனால் இதற்குள் "வெளியே போ" என்று தோழர் மேத்தா கத்துவதைக் கேட்டதும் "மேத்தா ஒழிக" "இட்லரிசம் ஒழிக" "சர்வாதிகாரம் ஒழிக" என்ற முழக்கம் பெரும்பான்மைப் பிரதிநிதிகளினின்றும் கிளம்பிற்று. மேத்தா பேரில் நம்பிக்கை

ரோஜா முத்தையா

இல்லாத் தீர்மானம் பிரரேபிக்கப்பட்டு ஆதரிக்கப்பட்டது. நிலைமைக் கட்டுக் கடங்காது போகவே தோழர் மேத்தாவே "மாநாடு ஒழிக" என்று கூச்சலிட்டுக்கொண்டு தனது காரியதரிசி குருசாமியுடன் மாநாட்டு மண்டபத்தை விட்டு விரைந்து வெளியேறினார்.

இந்த மேற்படித் தீர்மானம் முதல் நாள் விஷயாலோசனைக் குழுவில் பெரும்பான்மையோர் ஆதரவால் நிறைவேற்றப்பட்டு, தோழர் குருசாமி மேற்பார்வைக்குக் கொண்டுவரப்பட்டு, அவரால் 'டி. சௌசா ரிப்போர்ட்' ஐ அடிப்படையாக வைக்கப்பட்டு பரிசீலனை செய்யப்பட்டு, பின்னரே மாநாட்டின் பொதுக் கூட்டத்திற்குக் கொண்டு வரப்பட்டது. உத்தியோகங்கள் வழங்குகையில் தாழ்த்தப்பட்ட மக்கட்குக் கொடுக்கப்படும் சலுகைகள் அனைத்தும் தாழ்த்தப்பட்ட கிறிஸ்தவர்கட்கும் கொடுக்கப்படல் வேண்டுமென்ற தீர்மானம் அதே மாநாட்டில் எங்களால் கொண்டுவரப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டிருப்பது இதுபோது கவனிக்கப்பாலது. இரயில்வேயில் பொதுவாக எல்லா இலாக்காக்களிலும், குறிப்பாக உணவு இலாக்காவிலும் ஒரு குறிப்பிட்ட சமூகமே ஏகபோகமாக உரிமையை அனுபவித்துவருவதையும், அது எவ்வளவு தூரம் தொழிலாளர் சமூகத்தை பாதிக்கிறது என்பதையும் எடுத்து விளக்கப்பட்டது.

ஆகவே இரண்டாம் நிகழ்ச்சி இவ்வாறு மேற்கொண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்படாமல் குழப்பத்தில் முடியும்படி ஆயிற்று. மூன்றாம் நாள் நிகழ்ச்சியில் மேற்படி ஊழியர் சங்க பொதுக் காரியதரிசியே தோழர் மேத்தாவின் செய்கை சர்வாதிகாரமாகவும் மூறை தவறியும் இருந்ததாகவும் எடுத்துக் காட்டிப் பேசினார்.

மாநாட்டின் இரண்டாம் நாள் தொடக்கத்தின் போதே தோழர் மேத்தாவே "தீர்மானங்களை நிறைவேற்றும் அதிகாரம் மாநாட்டுப் பிரதிநிதிகட்கே அன்றி தனக்கோ வேறு யாருக்கோ இல்லை" என வெளிப்படையாகப் பேசினார். ஆனால் அவரே தன் சொல்லுக்கு மாறாக நடந்து மாநாட்டை அவமதித்தார். இதுதான் அகில இந்திய ரயில்வே தொழிலாளர் சம்மேளன தலைவர் மற்றவர்களுக்குக் காட்டும் வழி போலும்.

இவ்வறிக்கையில் தோழர்கள் வை. இராமச்சந்திரன், ஜியார்ஜ் அன்புதாஸ், தி. ஆ. மாணிக்கவாசகம், சி. ஆனவந்தார், ந. சுப்பராயலு, டி. ஆர். சீனுவாசன் முதலியவர்கள் கையொப்பமிட்டிருக்கிறார்கள்.

# கரூர் திராவிடர் மாநாடு

## 24-9-44-ல் நடைபெறும்

### நிகழ்ச்சி நிரல்

காலை 8 மணிக்கு தலைவர் ஊர்வலம் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து புறப்படும். 9 கொடியேற்று விழா, $9\frac{1}{2}$ திறப்பு விழா, 10 வரவேற்பப் பிரசங்கம், $10\frac{1}{4}$ தலைவர் தேர்தல், $10\frac{1}{2}$ தலைமை உரை, 12 திராவிடநாட்டுப் படம், 1 இடைவேளை, பிற்பகல், $2\frac{1}{2}$ நாகம்மை படம், 3 பெரியார் படம், $3\frac{1}{2}$ செல்வம் படம், 4 பாரதிதாசன் படம், $4\frac{1}{2}$ தீர்மானங்கள்.

அன்று மாலை 7 மணிக்கு அமராவதி நதியில் ரயில் பாலத்துக்கு அருகாமையில் பொதுக் கூட்டம் நடைபெறும்.

கும்பகோணம் நேஷனல் ரேடியோ ஒலிபெருக்கி அமைக்கப்பட்டிருக்கிறது.

# ஆசிரியர் ராஜிநாமா

வாளவாடி: திராவிடர் கழக திறக் காப்பாளரும் (பொக்கிஷதார்) இவ்வூர் ஜில்லா போர்டு ஆண் பாடசாலை ஆசிரியருமான தோழர் எஸ். சோமசுந்தரம் திராவிட நாட்டுப் பிரிவினைக்குத் தொண்டு செய்வதாகத் தீர்மானித்து 14-9-44-ல் தலைமை ஆசிரியரிடம் தமது ராஜிநாமாக் கடிதத்தை சமர்ப்பித்துவிட்டார்.

# வட சென்னை ஐஸ்டிஸ் சங்கம்

சென்னை: 10-9-44-ல் தோழர் எம். சங்கரன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மேற்படி சங்கக் கமிட்டிக் கூட்டத்தில் சேலம் மாநாட்டுத் தீர்மானங்களை ஆதரிப்பதாகவும், மேற்படி சங்கத்திற்கு 'வட சென்னை தெ. இ. ந. உ. சங்கம்' என்று பெயரிருப்பதை "வட சென்னை திராவிடர் கழகம்" என்று மாற்றுவதென்றும், சேலம் மாநாட்டுத் தீர்மானங்களுக்கு முரணாக வெளிவரும் அறிக்கைகளைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# நீத்தார் கடன்

கொழும்பு: தோழர் தே. ந. லட்சுமணன் அவர்களின் மனைவியார் சென்ற 12-7-44-ல் இயற்கையெய்தார். அன்னாருக்காக 12-9-44-ல் நீத்தார் கடனும் அனுதாபக் கூட்டமும் தோழர் ஒ. ஆ. நடேசாமி தலைமையில் நடந்தேறின. தோழர்கள் தேவதாசன், து. மூ. வேலாயுதம், செ. அ. காளிமுத்து, பெ. வி. காத்தமுத்து முதலியோர் நீத்தார் கடன் பற்றி பேசினார்கள். இதன் நினைவாக 'குடி அரசு'க்கு ரூ. 2 நன்கொடையளிக்கப்பட்டது.

# திருச்சியில் திராவிடர் தலைவர்

## பெரியார் 66-வது பிறந்த நாள் கொண்டாட்ட வைபவம்

### இளைஞருக்கோர் எழுச்சி

(நமது எழுத்தாளர்)

திருச்சிராப்பள்ளி, செப். 18-

நேற்று முற்பகலில் திருச்சி முனிசிபல் பப்ளிக் மண்டபத்தில் திராவிடர் பெருந் தலைவர் பெரியார் அவர்களின் 66-ஆவது பிறந்த நாள் அதிவிமரிசையாய் 'ஜனரல் மார்க்கெட் திராவிடர் வாலிபர் கழகத்' தாரால், தோழர் தி. பொ. வேதாசலம் தலைமையில் பல்லாயிரக் கணக்கான திராவிட இளைஞர் முன்னிலையில் கொண்டாடப்பட்டது.

பெரியார் அவர்கள் திருவுருவப்படத்துடனும், திராவிடர் கட்சியின் செங்கொடிகளுடனும் பிரம்மாண்டமான தோர் ஊர்வலம் நடந்த பின்னர் கூட்டம் 11-20 மணிக்குத் தொடங்கப்பெற்றது. பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்களுக்குப் பல கழகங்கள் சார்பில் மாலைகளணிவிக்கப்பட்டன.

தோழர்கள் எஸ். வி. லிங்கம், பொன்மலை கிருஷ்ணசாமி ஆகியவர்கள் சொற்பொழிவாற்றியதும், "திராவிடஸ்தானில் மக்கள் நிலை" எனும் பொருள் பற்றித் தலைவரவர்கள் பேசியபோது குறிப்பிட்டதாவது:-

### பெரியார் ஈ. வெ. ரா.

"பிறந்த நாள் கொண்டாட்டம் என்ற பெயரால் என்னைத் தோழர்கள் வாழ்த்தியும், புகழ்ந்தும் பேசினார்கள். இந்த ஆசீர்வாதங்களில் எனக்கோ, அவர்களுக்கோ நம்பிக்கை கிடையாது. என்றாலும் சும்மா ஆசையின் காரணமாகத் தான் குழந்தைகளைக் கொஞ்சுவது போல் சொன்னார்கள்.

"பொதுவாகவே என் பொதுத் தொண்டிற்குத் திருச்சி பேருதவி செய்திருக்கிறது; செய்தும் வருகிறது. நான் காங்கரசிலிருந்தபோதும், அதன்பின் சுயமரியாதைக் கட்சியைத் தீவிரமாய் நடத்தி வந்தபோதும், திருச்சி இளைஞர்கள் ஊக்கமுடன் உதவி செய்தார்கள். இந்தி எதிர்ப்பின் போதும் மேலான உதவியைப் பெற்றிருக்கிறேன்; அதேதாற்போல் ரயில்வே சிற்றுண்டிச் சாலைகளில் திராவிட மக்களுக்கிழைக்கப்பட்டு வந்த இழிவு ஒழிவுக்கான கிளர்ச்சியும் திருச்சியில் தான் தொடங்கப்பெற்றது; தமிழ் இசைக்கும் திருச்சியில் தான் நானும் குமாரராஜா அவர்களுமாக அடிகோலியது. இப்பொழுதும் சேலம் மாகாண மாநாடு வெற்றியுடன் நடைபெற்றதற்கும் [illegible] நான் [illegible]ணம். உங்கள் ஊரிலிருந்து மாத்திரம் 400 பிரதிநிதிகள் வந்ததாகத் தெரிகிறது. அதுமாத்திரமல்ல, மாநாட்டுக்குப் போகக்கூடாதென்றிருந்த என்னை கெட்டித் தள்ளிக்கொண்டு சேர்த்ததும் திருச்சியே (நீண்ட கைதட்டல்).

"மக்களில் பெரிய மனிதர்களென்று சொல்பவர்களை சுயநல வயிற்றுப் பிழைப்புக்காரர்கள் எப்படிப் பயன்படுத்திக் கொள்கிறார்களென்பதற்கு உதாரணம் சொல்கிறேன் கேளுங்கள். நான் சென்னையில் இம்மாத 7-ஆம் நாளன்று ஒரு மகாராஜாவைப் பார்க்கநேரிட்டது. என்னுடன் முதலியார் நண்பரொருவரும் இருந்தார். மகாராஜா சில கூலிகள் வார்த்தையை நம்பிக்கொண்டு "என்ன, தீர்மானங்களெல்லாம் வெறும் நாஸ்திகமாகப் போய்விட்டதே, இதாட்டில்லாமே [illegible]?" என்று மகாராஜா சொன்னார். உடனே மாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்களை எடுத்துப் படித்துக் காட்டி விளக்கம் செய்தேன். உடனே அவருக்கு மிக்க மகிழ்ச்சி ஏற்பட்டு, "முதலியார் அவர்களே, இவை தாம் உயர்ந்த தத்துவங்கள் (High ideals) பெரியார் ஒரு ரிஷி (Saint) இவர் தீர்மானங்கள் குற்றமாக இருக்குமா? நான் சேர்ந்துள்ள பிரம்ம சமாசத்தினுடைய கொள்கைகளும் இவைகளே", என்று புகழ்ந்து பேசினார். இதிலிருந்து பாருங்கள், சுயநலக் கூலிகளால் பெரிய மனிதர்கள் நம்மீது தப்பெண்ணம் கொள்ளும் தன்மையை!

"சென்னை நகரத்திலே இன்னும் இரண்டு மூன்று தோழர்களை சந்தித்தேன். "என்ன, ஏதேதோ புகுத்தியிருக்கிறீர்களே", என்று சொல்லிவிட்டு இரண்டு மூன்று வார்த்தைகளைக் குறிப்பிட்டனர். "ஆதியில் கட்சி ஆரம்பிக்கப்பட்டபோதே இவை இருந்தன. நடுவில் சுயநலக்காரர் கட்சியில் அங்கம் வகித்தபோது இவை மறைக்கப்பட்டிருந்தன. மீண்டும் அவற்றை உயிர்ப்பிப்பதில் என்ன தப்பு", என்றதற்கு அவர்களும் "அப்படியா" என்று ஒப்பினார்கள்.

"மாநாடு செல்லுபடியாகாது என்று அறிக்கைவிட்டவர்களின் சரித்திரங்களை எழுத ஆரம்பித்தால் ஒரு புத்தகம்; இரண்டு புத்தகங்கள் போதாது; நாறும் சிரிக்கும். "ராஜா" பட்டம் முதற்கொண்டு, "ராவ்சாகிப்" பட்டம் வரையில் ஒரு பத்துப்பேர்களாவது தங்கள் கவுரவப் பட்டங்களை விடவேண்டும். அப்பொழுது தெரியும், கட்சி எவ்வளவு முன்னேற்றமடையுமென்று.

### கட்சிப் பத்திரிகை திராவிடன்

'நமக்குள்ளே இருக்கும் ஜாதி பேதங்கள் வித்தியாசங்கள் யாவும் ஒழிந்து நம் இன மக்கள் ஒரு கட்டாக வேண்டும் என்பதற்குத்தான் [illegible] காரியங்கள் பயன்படவேண்டும்' என்று ஆதியிலேயே ஜஸ்டிஸ்கட்சியைத் தோற்றுவித்தவர்கள் கூறியிருக்கிறார்கள். கட்சியின் தமிழ்ப் பத்திரிகைக்குத் 'திராவிடன்' என்பதுதான்பெயர். அந்தக்காலத்தில் தங்களைத் 'திராவிடர்' என்று சொல்லிக்கொள்ள எல்லோருக்கும் தைரியம் வாராத காரணத்தால் தென் இந்தியர் என்று சொல்லிக்கொண்டார்கள். தவிர தீவிரமாய் இருந்த காங்கரசிலிருந்து தங்களைப் பிரித்துக்காட்டிக்கொள்ள 'மிதவாதிகள்' (Liberals) என்று தங்களைக் கூறிக்கொண்டார்கள். இதுதான் தென்இந்திய மிதவாதிகள் சங்கம் (S I L F )என்ற பெயரின் காரணம். ஆனால் இப்பொழுது நாம் இருக்கும் தீவிர நிலையில் நம்மை தென் இந்தியர் என்றும் (லிபரல்) மிதவாதிகள் என்றும் சொல்லிக்கொள்வது வெட்கக்கேடல்லவா?

### வடநாட்டில் நம் நிலை

'மேலும், வடநாட்டிலே அடிக்கடி புத்தாண்டு புத்தகங்கள் (New year books) போடுகிறார்கள். அரசியல் கட்சிகள் என்ற தலைப்பிலே ஜஸ்டிஸ் கட்சியைப்பற்றி எழுதும்போது, 'சர்க்காருக்கு ஒத்துழைப்பும்,காங்கரசிற்கு விரோதமும், தேசவிரோதத்துக்கு முட்டுக்கட்டையும்' (Support the Government and oppose the Congress) என்றே குறிப்பிடுகிறார்கள். வட இந்தியன் 'பார்ப்பனரல்லாதார் கட்சி' என்ற பெயரைக் கேட்ட மாத்திரத்தில் வேப்பெண்ணெய் குடித்தவன் மாதிரி ஆய்விடுகிறான்.

"உள்ளபடியே நமக்குள்ளிருக்கும் பட்டம் பதவியாளர்களால் நாம்பட்ட தொல்லைகள் 20 வருஷ காலமாய் சொல்லிலடங்கா. இந்நாளது வரையிலும் நமது கட்சி உருப்படாமற்போனதற்குக் காரணம் பொது மக்களல்ல; இந்த ஒரு சில பட்டம் பதவியாளர்தாம். இவர்கள் சிலருக்குள் ஒருவனைக் கண்டால் மற்றவருக்குப் பிடிக்காது. ஒரே தலைவனை மூன்றாண்டுகள் கூடத் தொடர்ந்து வைத்திருக்க இந்தச் சுயநலக் கும்பல் பொறுக்காது. அடிக்கடி நம்பிக்கை இல்லாத் தீர்மானம் வரும். புதிது புதிதான தலைவர் ஏற்பட்டால் தான் புதுப் பணம் பெறலாம், புதுப் பதவி பெறலாம் என்பது பல வயிற்றுப் பிழைப்புத் தொண்டர்கள் கருத்து.

### பதவி மறுப்பு முன்னமே செய்திருக்கிறோம்

"என்று காங்கரஸ் மந்திரி வேலையை விட்டதோ அன்றே ராஜா சர் அவர்களது அடையாறு செட்டிநாடு அரண்மனையில் மந்திரி உத்தியோகத்தை ஏற்கக் கூடாது என்று தீர்மானம் செய்தேன். அந்தத் தீர்மானம் இன்னும் வலியுடன்தானிருக்கிறது. [illegible]

திராவிடர் என்பதாகத் திருவாரூரில் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றிருக்கிறது. 26-ஆவது தீர்மானத்தின்படி 'இந்துலா' வானது திராவிடருக்குரிய சட்டமாகாது என்றும் தீர்மானித்து இருக்கிறோம். 27-ஆவது தீர்மானத்தை நிறைவேற்றியதால் திராவிட சமுதாயத்திற்குள்ளுள்ள ஜாதிப் பிரிவுகள் ஒழிக்கப்படவேண்டுமென்பதை ஒத்துக்கொண்டவர்களானோம். அது மட்டுமல்லாமல், ஜாதிப் பிரிவுகளை வலியுறுத்தும் புராணம், இதிகாசம், சாஸ்திரம் முதலியவை ஒழிந்தாகவேண்டும் என்றும் தீர்மானித்திருக்கிறோம்.

''எல்லாவற்றைக் காட்டிலும் நம்மைக் குறிப்பிடும் உண்மையான பெயர் நமக்குத் தேவையா? இல்லையா? 'நான்-பிராமின்' NON-BRAHMIN என்றும், 'நான்—முகமதியன்' (Non-Muhammadan என்றும், பார்ப்பனர் அல்லாதார்—முகமதியர் அல்லாதார் என்றும் இந்த நாட்டுக்குரிய மக்களை 'அல்லாதார்' பட்டத்திலேயே அழைத்து வருவது என்ன மதியீனம்? திராவிடர்களுக்கு வேண்டிய மான உணர்ச்சி இல்லை என்பதற்கு இது போதாதா?

### நாம் ஏணி அல்ல

''திராவிடர் சங்கத்தின் மூலமாக நாம் கிளர்ச்சி செய்யும் போது, எவனும் நம்மை எதிர்க்க முடியாது. இனிமேல் தான் உலகம் நமது சக்தியை—வல்லமையை உணர முடியும். ஆகையினால் வாலிபத் தோழர்களே! கட்சியின் பெயர் மாற்றத்தால் குடிமுழுகிவிட்டதாகக் கூப்பாடு போடும் மேதாவிகளுக்கு 'பட்டம் பதவியைக் குறி வைத்த ஒருத்தராவது இக்கட்சிக்குள் நுழையக்கூடாது, இன உணர்ச்சியோடு உழைப்பவர்கள் தான் வேண்டும்' என்று சொல்லுங்கள்.

''நாம் யாருக்கும் பயப்படவேண்டிய அவசியமில்லை. நாம் துணிவும், தன்னல மறுப்புணர்ச்சியும், தியாக புத்தியும் கொண்டு கிளர்ச்சியைத் துவக்கி வேலை செய்தால், நாளைக்கே குமாரராஜா தம்முடைய பட்டத்தை விட்டு நம்மை அண்டமாட்டாரா?, பொப்பிலி தம்முடைய பரம்பரை ராஜா பட்டத்தை விட்டுவிடமாட்டாரா?, சர் ஆர். கே. சண்முகம் தம்முடைய 'சர்' பட்டத்தை உதறிவிடமாட்டாரா?'' (பேரொலிப்பு) அதை விட்டு நம் கட்சி அவர்களுக்கு ஏணியாய் இருந்தால் பாமர மக்களும், சர்க்காரும் மதிக்கமாட்டார்கள்'' என்று பேசினார். நண்பகல் 1-20 மணிக்குக் கூட்டம் முடிவுற்றது.

(இரவு விருந்து நடவடிக்கையும் பெரியார் சொற்பொழிவும் அடுத்தவாரம் வெளிவரும்)

# "ஜஸ்டிசைட்"

'ஜஸ்டிசைட்' என்கிற ஆங்கில வாரப்பத்திரிகை இவ்வாரமுதல் வெளிவருகிறது.

மானேஜர்

## பகுத்தறிவுப் புலவர்கள் மாநாடு

நாட்டில் இயல் இசை நாடகம் ஆகிய துறைகளிலும், புராண, இதிகாசம், காவியம், முதலிய இலக்கியத் துறைகளிலும் பெரியதொரு கிளர்ச்சியும் புரட்சியும் நடைபெறுகின்றன. இவைகளுக்குப் போலிகள் எதிர்ப்பும், உண்மையை உணர்ந்து பார்க்காத குறைவாளர்கள் எதிர்ப்பும், தன் அறிவில்லாத பாமரர் எதிர்ப்பும், சில பகுத்தறிவை பயன்படுத்தாத படிப்பாளிகள் எதிர்ப்பும், தாங்கள் உண்மையென்று நம்பிக்கொண்டு துடிக்கும் சில பண்டிதர்கள் என்பவர்கள் எதிர்ப்பும் இவ்வாராக பல எதிர்ப்புகள் நாட்டில் கிளம்பி குழப்பம் உண்டாக்கப்பட்டு வருகிறது.

சுமார் 10 ஆண்டுகள் 15 ஆண்டுகளுக்கு முன் இருந்த புலவர்களைவிட பின்னால் தோன்றிய புலவர்கள் பெரிதும் பகுத்தறிவு வாதிகளாக இருந்து நலமும் மேன்மையும் அளிக்கும் வழியில் தங்களது புலமையை பயன்படுத்தி வருவது போற்றவும், பாராட்டத் தக்கதுமாகும். எனினும் இப்பகுத்தறிவுப் புலவர்களை ஒரு வழிப்படுத்தி ஒருவருக்கொருவர் தொடர்பை உண்டாக்கி இவர்களது அறிவுத் திறத்தை வலிவுபெறச்செய்து மூடநம்பிக்கையை முத்தமிழின் போரால் பரப்பும் (பிரசாரம் செய்யும்) வாணர்களைத் திருப்பி நல்வழிப் படுத்தவும் பயன்படுத்த வேண்டியது இன்றியமையாததாய் இருப்பதால் இதைக் கருதி அடுத்தாற்போல் பகுத்தறிவுப் புலவர் கூட்டம் என்னும் பேரால் ஒரு மாநாடு கூட்ட கருதி உள்ளோம்.

ஆதலால் புலவமணிகள், முத்தலை, காவியம், இலக்கியம் முதலியவைகளின் பழக்கமும், புலமையும், அன்பும், ஆர்வமும், ஆதரவளிக்கும் உள்ளமும் உள்ளவர்கள் அருள்கூர்ந்து இம்மாநாட்டில் கலந்து புலவர் கூட்டத்துக்கு உயிர் அளிக்கவேண்டுகிறோம்.

இதற்கு முதற்செயலாக ஆங்காங்குள்ள நண்பர்கள் தாங்களறிந்த புலவர்கள் பெயரையும், தமிழ்ப்பற்றுள்ளவர்கள் பெயரையும், தமிழாதரவாளிகள் பெயரையும், தமிழ் பயிற்சி உள்ளவர்கள் பெயரையும் கீழ்க்கண்ட முகவரிக்குத் தெரிவிக்க வேண்டிக்கொள்ளுகின்றோம்.

பகுத்தறிவு புலவர் கூட்ட
மாநாட்டுச் செயல் நிலையம்,
ஈரோடு.

## அறிவிப்பு

நம் கழகத்துக்கு உறுப்பினர் சேர்க்கும் பணியிலீடுபட்டுள்ள தோழர்கள், தங்களுக்குக் கிடைத்த ரசீது புத்தகங்களில் அங்கத்தினர் சேர்த்து முடிந்ததும் தலைமை நிலையத்துக்குச் சேரவேண்டிய ரசீதுகளையும், பகுதி பணத்தையும் இங்கு அனுப்பிவிட்டு மேலால் தேவையான ரசீது புத்தகங்கள் பெற்றுக்கொள்ளவும், உறுப்பினர் சேர்த்து முடித்த தோழர்கள் தயவுசெய்து விரைவில் சேர்த்தனுப்பவும் வேண்டுகிறோம்.

திராவிடர் கழகம்,
(ஜஸ்டிஸ் கட்சி)
தலைமை நிலையம்,
ஈரோடு

## பெரியார் செல்வம்

கும்பகோணம், செப். 13—

கும்பகோணம் தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் தலைமையில் 6-9-42-ல் திருமணம் புரிந்துகொண்ட தோழர் உத்திராபதி—முத்துலட்சுமி ஆகியவர்களுக்குப் பிறந்த பெண் குழந்தைக்கு ''பெரியார் செல்வம்'' எனப் பெயரிடப்பட்டது. இக்குழந்தையின் நினைவாக 'குடி அரசு'க்கு ஒரு ரூபாய் நன்கொடை அத்தம்பதிகளால் அளிக்கப்பட்டது.

## சேலம் திருக்குறள் மாநாடு

சேலம் திருவள்ளுவர் கழக சார்பாக 9, 10-9-44-ல் சிறப்பாக நடைபெற்றது. ஆயிரக்கணக்கான மக்கள் கூடினர். தோழர் ஆ. இராமசாமிகவுண்டர் சேலம் கல்லூரித் தலைவர், மாநாட்டைத் திறந்து வைத்தார். அவர் கூறியதின் சுருக்கம்:-

"தமிழ் நாட்டில் பிற்காலத்தில் ஆரியர்கள் வந்து நுழைந்து தமிழருடைய நாகரிகத்தையும், தமிழருடைய கலைகளையும் தாழ்த்தி மேம்பட்டவைகளைத் தங்களுடையதாகக் கூறிக்கொண்டு தமிழர்களுக்குப் பெருங்கேடு செய்தார்கள். ஆரிய சூழ்ச்சி தமிழை குலைத்தது' இன்று தமிழர்கள் விழித்துக் கொண்டார்கள். தங்கள் கலை, பண்பு, நாடு முதலியவைகளை காப்பாற்ற முனைந்திருக்கிறார்கள். அதற்கு எந்த எதிர்ப்பு இருந்த போதிலும் அது அழிந்து போகும். தமிழ் நூல்களிலும் ஆரியர் தங்கள் ஆரியக் கொள்கைகளைப் புகுத்திப் பாழ்படுத்தி விட்டனர். இனி தமிழர்கள் வீரத்துடன் எழுந்து தமிழ் போர்முனைத் துவக்க வேண்டும்."

தலைவர் தோழர் ஆர். பி. சேது பிள்ளை பி. ஏ., பி. எல்., சென்னைப் பல்கலைக் கழக தலைமைத் தமிழ் விரிவுரையாளர் பேசியதாவது:

தமிழர்களுடைய நூல்களை தமிழர்களுடைய நாகரிகங்களைப் பற்றி ஆங்கிலப் பேராசிரியர் கால்ட்வெல் துரையவர்கள் விளக்கமாக எழுதியுள்ளார். ஆரியத்திற்கும் தமிழுக்கும் தனி மாறுபாடுகள் உண்டு என்பதையும் தமிழருடைய பண்புகளும் கலைகளும் தனித்தது பழமையானது என்பதையும், திருக்குறள் என்னும் தமிழ் நூல் சகல மத சமயங்களுக்கு அப்பாலுள்ளது என்றும், பொது மக்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டியென்றும், தீவிரமாக ஆதரித்துப் பேசினார். பகுத்தறிவுக்கு ஒவ்வாதவைகளைத் தள்ளினால் அது அறிவுக்கு ஒத்தது என்றும், அறிவுக்குச் சிறந்த நூல் திருக்குறள் என்றும் மக்கள் பெரிதும் மகிழப் பேசினார். இன்னும், தேவநேயப்பாவாணர், இளவழகனார், பொன்னம்பலனார், உலக ஊழியர், ஐயாவு நாயக்கர் முதலியோர் பேசினார்கள்.

கடைசியாக தோழர் எம். இராஜகோபாலன் பி. ஏ., ஆசிரியர் சேலம், அவர்கள் நன்றி கூறுதலுடன் மாநாடு பெருஞ் சிறப்பாக முடிவுற்றது.

அதில் பள்ளி மாணவர்களுக்கு (S. S. L. C., Inter, B. A.,) போன்ற வகுப்புகளுக்கு திருக்குறளில் அதிகமான பாகங்களை வைக்கவேண்டுமென்றும், பகுத்தறிவுக்கு ஒவ்வாததும் மக்களுக்கு பயன்படாததுமான பாடங்களை வைக்குமாறு பல்கலைக் கழகத்தாரையும் அரசியலாரையும் கேட்டுக் கொள்கிறது என்றும்,

"திருவள்ளுவர்" நாள் என ஆண்டொன்றுக்கு ஒரு நாளை புலவர்கள் குறித்து, அந்நாளை ஒரு சிறந்த விழாவாக (ராமஜயந்தி, கிருஷ்ணஜயந்தி, தீபாவளியைப் போல்) தமிழர்களனைவரும் கொண்டாடவும், அந்நாளை சர்க்கார் விடுமுறை நாளாகவும் (Govt., Holiday) ஆக்கவேண்டுமாய் சர்க்காரைக் கேட்டுக் கொள்ளுவதாகவும், இராவ்சாகிப் துரைசாமி பிள்ளை அவர்கள் பிரேரேபிக்க, ரிடையர்டு மாஜிஸ்ட்ரேட் தோழர் ராமசாமி நாயுடு ஆதரித்துப் பேசினார். இன்னும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

(ந-ர்)


இரண்டாம் போர்முனை!
மூன்றாம் போர்முனை!!
நான்காம் போர்முனை!!!
ஐந்தாம் போர்முனை!!!!

★

இவைகளுக்கெல்லாம்
போதிய உதவிகள் வேண்டும்

ஆகவே
இன்னும் அதிகமான
பணம் தேவை

★

மே. த. கவர்னரின்
யுத்த நிதிக்கு
தாராளமாக பணம் கொடுங்கள்


## கோவை ஜில்லா சுயமரியாதை மாநாடு

1-10-44-உ ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல், கோவை சாரதா பெண் பாடசாலையில் நடைபெறும்.

மாநாட்டுத் தலைவர்: தோழர் சி. என். அண்ணாதுரை எம். ஏ.,

கொடியேற்றுவித்தல்: தோழர் இரா. நெடுஞ்செழியன்.

மாநாட்டைத் திறந்து வைத்தல்: பெரியார் ஈ. வெ. ராமசாமி மற்றும் மாநாட்டில் பல தோழர்கள் கலந்து கொள்ளுவார்கள்.

சுயமரியாதைத் தோழர்கள் யாவரும் மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

ஈ. கிருஷ்ணசாமி பி. ஏ.,
வரவேற்புக் கமிட்டித் தலைவர்.

ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

# குடி அரசு

1944-ஆம் செப்டம்பர்-௴ 23-உ

## சென்னையில் புதுக்கட்சிக் கூட்டம்

17-9-44ந் தேதி சென்னையில் புதுக்கட்சி துவக்க சிலர் சேர்ந்து ஒரு கூட்டம் நடத்தி பத்திரிகைகளில் அறிக்கை விட்டிருக்கிறார்கள்.

கூட்டம் கூட்டப்பட்ட இடம் சென்னையில் ஒரு கோடியில். கூடினவர்கள் 20, 30 பேர்கள். இதற்கு ஆதரவளித்தவர்கள் கூட்டத்தில் கூடியிருந்தவர்களைவிட அதிகமான எண்ணிக்கை உள்ள போலீசு பந்தோபஸ்துதான். நடந்த விஷயமோ மகாரகசியம்.

பத்திரிகைக்காரர்களை அந்த வீதி வழிகூட அனுமதிக்கவில்லை.

வெளியான விஷயங்களில் தலைவர் பேசியது ஒருவிதம், செய்யப்பட்டதாகச்சொல்லும் தீர்மானங்கள் வேறுவிதம்.

கூட்டம் நடந்த கொட்டகைக்கு வெளியில் தடுக்கப்பட்டிருந்த பலர் உள்ளே செல்ல மறுக்கப்பட்டவுடன் "யாவரும் வரவேண்டுமென்று நோட்டீஸ் போட்டிருக்கிறதே" என்று நோட்டீஸ் காட்டியதற்கு கூட்டம் கூட்டியவர் "அந்த நோட்டீஸ் நாங்கள் போடவில்லை" என்று சொல்லிவிட்டார்கள். மற்றும் சிலர் "வெளியூரிலிருந்து நாங்கள் பணம் செலவுசெய்து கொண்டு வந்து இருக்கிறோம், எங்களுக்கும் பட்டம் பதவி விடும் தீர்மானம் பிடிக்கவில்லை ஆதலால் உள்ளே விடுங்கள்" என்று கேட்டதற்கு, 'அது முடியாது, இது குறிப்பிட்ட ஒரு சிலர் கூட்டமே ஒழிய கட்சி மக்கள் கூட்டமல்ல' என்று சொல்லிவிட்டார்கள்.

உள்ளே இருந்தவர்களில் இரண்டொருவர் சத்தம் போட்டு வாக்குவாதம் செய்து கொண்டது வெளியில் உள்ளவர்களுக்கு சத்தம் கேட்க ஆரம்பித்த உடன் வெளியில் உள்ளவர்களை போலீசார் காது கேட்காத அளவு தூரத்திற்கு விரட்டி அடிக்க உத்தரவிடப்பட்டு அம்மாதிரியே செய்யப்பட்டு விட்டது.

இதுதான் புதுக் கட்சி தோற்ற வைபவம்.

தீர்மானங்களோ

முதலாவது தீர்மானம்:

"சேலம் தீர்மானம் தென்னிந்திய நல உரிமைச் சங்க நிர்வாகக் கமிட்டியை கட்டுப்படுத்தாது" என்பதாகும்.

இத்தீர்மானம் செய்த கூட்டத்தில் நிர்வாகக் கமிட்டி மெம்பர் எத்தனை பேர் இருந்தார்கள்? எத்தனை பேர்களுக்கு அறிவிப்புக் கொடுக்கப்பட்டது? எத்தனை பேர் அழைக்கப்பட்டார்கள்? எத்தனை பேர் உள்ளே விடப்படாமல் மறுக்கப்பட்டார்கள்? என்பனவாதிய விஷயங்கள் கவனிக்கப்பட்டால் கட்சியின் சட்ட விதிகளைப் பற்றிப் பேசும் புதுக் கட்சியாரின் யோக்கியதையும் தெளிவும் விளங்கிவிடும்.

இரண்டாவது தீர்மானம்:

"பெரியார் ஈ. வெ. ரா. ஜஸ்டிஸ் கட்சி மெம்பர் அல்ல என்று சேலம் வரவேற்புக் கமிட்டி தீர்மானித்ததை சட்டத்திற்கு கட்டுப்பட்டதென்றும் நியாயம் என்றும் இம்மகாநாடு ஆதரிக்கிறது" என்பதாம்.

இதற்குப் பேர் மகாநாடாம். சேலம் வரவேற்புக் கமிட்டியார் பெரியாரை ஜஸ்டிஸ் கட்சி மெம்பர் அல்ல என்று தீர்மானித்தார்களாம். எந்தக் கூட்டத்தில் தீர்மானித்தார்களோ! இருந்தாலும் சட்டப்படி செய்யப்பட்டதாம். எந்த சட்டத்தின் எந்த விதிப்படியோ! இவை ஒருபுறத்தில் இருந்தாலும் வரவேற்புக் கமிட்டிக்கு மகாநாடு தீர்ந்த உடன் கணக்கை ஒப்புவிப்பதைத் தவிர வேறு வேலை எந்த நியாயப்படி, எந்த பழக்கவழக்கப்படி இருப்பதாக இந்த மகாநாட்டார் கருதினார்களோ தெரியவில்லை. இவர்கள்தான் திராவிடநாட்டு (தென் இந்திய) 4 கோடி மக்களுக்கு பிரதிநிதிகளாகப் போகிறார்களாம். பேஷ் பேஷ் அழகுக்கு மேல் அழகுதான்.

மூன்றாவது தீர்மானம்:

"இந்தக் கூட்டம் இப்போது தலைவரில்லாமல் இருக்கும் ஜஸ்டிஸ் கட்சிக்கு ஒரு மகாநாடு கூட்டி தலைவரை ஏற்படுத்தும் வரை தேழூர் பி. ராமச்சந்திர ரெட்டியாரை தலைவராக இருந்து காரியம் நடத்த அதிகாரம் கொடுத்திருக்கிறது" என்பதாம். இதுதான் இக்கட்சியில் தலைவர் நியமிக்கும் முறை. இப்படி நியமிக்கப்பட்ட தலைவர் முறையில் இனி என்ன செய்வரோ பார்ப்போம். அவரே தன் தலைமை உரையில் "தலைவர் இந்த மாதிரி எலக்ஷனில் தெரிந்தெடுக்கப்படுவது பயன்படாது, பொதுஜன ஆதரவு இருக்கிறதா என்று பார்க்கவேண்டும், அப்படிப் பட்டவர்தான் தலைமைக்கு தகுதி" என்று சொல்லி இருக்கிறார். இது 'லிபரேட்டர்', இதர பத்திரிக்கைகளில் இருக்கின்றன.

அடுத்த தீர்மானம் 4வது. இது அதிசயமும், அருமையுமான தீர்மானம். அதாவது,

"கவர்னர்பெருமான் சர் ஆர்தர் ஹோப் துரையையும், அவரது அருமை மனைவியார் லேடி ஹோப் அம்மையாரையும் இம்மகாநாடு நன்றி அறிதலுடன் பாராட்டுகிறது"

என்பதாகும்.

முதலாவது இந்தத்தீர்மானத்தை ஒப்புக்கொள்ள கவர்னர் தம்பதிகளே வெட்கப்படாமல் இருப்பார்களா என்பது யோசிக்கத் தக்கதாகும். என்றாலும் அத்தீர்மானகாரரது அக்கூட்டத்தினரின் யோக்கியதையையும், கருத்தையும் படம் பிடித்து காட்டுவதாகும்.

நம் கட்சி விஷயத்தில் சர்க்கார் சரியானபடி நடந்து கொள்ளவில்லை என்பது சேலத்தில் 20000 பேர் கூடிச் செய்த தீர்மானத்தின் போக்கு.

சென்னையில் 20 பேர் போலீஸ் பந்தோபஸ்துடன் கூடிச் செய்ததாக சொல்லப்படும் தீர்மானத்தின் வாசகம் "கவர்னரையும் அவரது மனைவியாரையும் நன்றியறிதலுடன் பாராட்டுவதாக" செய்யப்பட்டது.

எனவே இவர்கள் போக்கு இனி எப்படி இருக்கும் என்பதற்கும் இவர்கள் உள் கருத்து என்ன என்பதற்கும் வேறு 'ஜோசியம்' பார்க்கவேண்டுமா?

இனி இவர்கள் செய்யவேண்டிய வேலை என்ன என்றால், பார்ப்பனரல்லாத மக்களுக்குச் செய்ய வேண்டிய வேலைகள் இந்த 20 பேர்களில் ஒருவர் இனி

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

மாநாடு கூட்டி தலைவர் தெரிந்தெடுக்க வேண்டியதுதான். நடக்கட்டும்.

பொதுவாக, ஜஸ்டிஸ் கட்சி பிரமுகரான தோழர் பாத்ரோ அவர்கள் அங்கு பேசியதில்,

"பெரியார் ஈ. வெ. ராமசாமி நம்மைக் கலக்காமல் தன் இஷ்டப்படி இந்த 4 வருஷமாக ரொம்பக் காரியங்களைக் கெடுத்துவிட்டார்.

"ஜனநாயகம் என்பதே அவரிடம் கிடையாது. சர்வாதிகாரம் செய்து வருகிறார். அந்தப்படி அவரை வேலை செய்ய விட்டது தவறு"

என்று பேசி கண்டித்து இருக்கிறார். இதற்கு பதில் சொல்கிற மாதிரியில் தலைமை வகித்த தோழர் இராமச்சந்திர ரெட்டியார் அவர்கள், தனது தலைமை உரையில் தற்காலம் கட்சியின் நிலைமை ஏதோ கெட்டுப்போய்விட்டதாகக் கருதிக்கொண்டு,

"இன்றைய கட்சி நிலைமைக்கு யார்மீதும் குற்றம் சொல்லக் கூடாது. நாம் யாவரும் சிறிதும் கவலையற்றுக்கிடந்தோம். பெரியார் தன்னால் கூடியதைச் செய்திருக்கிறார்" என்றும்,

"நாம் பிரிந்துவிடக்கூடாது, பெரியார் ஈ.வெ.ரா.விடம் எனக்கு அதிக மதிப்பு உண்டு, இக்கட்சி துவக்கி நடத்திய டாக்டர் நாயர், சர் தியாகராயர், பனகலரசர், பொப்பிலி அரசர் ஆகியவர்களைப் போலவே பெரியாரையும் மதிக்கிறேன். அவர் செய்த நன்மைகள் மறக்க முடியாததாகும். அவரையும் அவரது நண்பர்களையும் கண்டிக்கும் தப்பான வேலையை நான் செய்யமாட்டேன். ஆனால் அவரை அவரது தீர்மானங்களை புனராலோசனை செய்யும்படி தான் வேண்டிக்கொள்வேன்" என்று பேசி இருக்கிறார்.

மற்றும் அங்கிருந்த பலர் இப்படியே பேசியும் இருக்கிறார்கள்.

ஆதலால் தோழர் சர் பாத்ரோ பேச்சுக்கு நாம் பதில் கூற வேண்டியதில்லை.

கடைசித் தீர்மானமாக "ஜஸ்டிஸ் மேடைகளில் கடவுள் எதிர்ப்பு மத எதிர்ப்பு பேச்சுகள் பேச அனுமதிக்கக்கூடாது" என்பது. இது எப்போது செய்யப்படுகிறது என்று பார்த்தால் புராணங்கள் கொளுத்தப்பட்டு, இராமாயணம் சந்தி சிரிக்கச் செய்யப்பட்டு "நாங்கள் இந்துக்கள் அல்ல" என்று 4-வருடத்துக்கு முன் திருவாரூரில் தீர்மானிக்கப்பட்டு மற்றும் "ஆரிய சமய ஆதாரங்களை விலக்கவேண்டும், ஒழிக்க வேண்டும்" என்றெல்லாம் தீர்மானிக்கப்பட்டு 1938-டிசம்பர் முதல் 1944-ஆகஸ்ட் வரை பெரியார் பேச்சுக்களில் நூற்றுக்கணக்கான இடங்களில் திராவிடர்களை இழிவுபடுத்தும் மூடநம்பிக்கையில் வரும் கடவுள்கள், மதம், சாதி, வகுப்பு ஆகியவைகளை தொலைத்து நாசமாக்கவேண்டும் என்று பேசி தீர்மானங்கள் செய்யப்பட்ட பின்பு, இன்று 20பேர் கூடிய 'இப்பெரிய பிரதிநிதித்துவமுள்ள' மாநாட்டாருக்கு இந்தப்புத்தி தோன்றி இருக்கிறதென்றால் அல்லது இப்போதுதான் கேள்விப்பட்டவர்கள் போல் நடக்கிறார்கள் என்றால் இவர்களது அறிவாற்றலையும், யோக்கியப் பொறுப்பையும் பொது மக்கள் தான் உறைத்து, நிறுத்துப்பார்க்க வேண்டுமே ஒழிய நமக்கு எழுத சரியான வார்த்தைகள் கிடைக்கவில்லை.

கடைசியாக பெரியார் போக்கு ஜனநாயகமா? சர்வாதிகாரமா? என்று துடிதுடிக்கும் அன்பர்களுக்கு இச்சமயத்தில் ஒரு வார்த்தை அதாவது பெரியார் சொல்லும், செயலும், தீர்மானமும் அவர் ஒருவராய் இருந்து பேசி ஒருவராய் முடிவு செய்து ஒருவராய் நடத்துபவரல்ல. எந்தப் பேச்சும் எழுத்தும் 4000, 5000, 10000 மக்கள் முன்னிலையில், அவர்களது கூட்டத்தில் ஒரு சிறு எதிர்ப்பில்லாமல் பேசி எழுதி ஏகமனதாய்த் தீர்மானிக்கப்படுபவைகளாகவே இருந்து வந்திருக்கின்றனவே ஒழிய வேறில்லை. பொறாமை கொண்ட ஏதோ சிலர் அதுவும் ஒருவர் இருவர் அதுவும் வெளியில் மக்களிடம் தலைகாட்டாமல், மேடைக்கு வர தைரியமில்லாமல், கட்சிக்கு தனது தொண்டு என்ன என்று கணக்குக் காட்ட இடமில்லாமல் மூலையில் இருந்து விட்டு இப்படி முணுமுணுத்திருக்கலாம், இன்றும் முணுமுணுக்கலாம் என்பதல்லாமல் மற்றப்படி பெரியார் இதுவரை யாருடைய வார்த்தையை, கருத்தை அலட்சியம் செய்தார், எவர் சொல்லிக் கேட்கவில்லை, என்று யாராவது சொல்லமுடியுமா?

அப்படி இருக்க அவரை சர்வாதிகாரி என்று சொல்லுகிற மக்கள் இந்த 20 பேர் கூடி போலீஸ் பந்தோபஸ்து வைத்து, அழைத்தவர்கள் சிலரை

# சேலம் மாநாட்டிற்குப் பின்...?

சேலம் மாநாடு நடந்து இன்றைக்கு 27 நாள் முடிந்து 28-வது நாள். தீர்மானங்களை ஏகமனதாய் நிறைவேற்றினீர்கள். இதுவரை நீங்கள் செய்த வேலை என்ன? 9 பைசா கார்டுகள் வாங்கி அதில் நீங்கள்,

"திராவிடர் கழகத்தில் அதன் கொள்கைகள், திட்டங்கள், சேலம் மாநாட்டு தீர்மானங்கள் ஆகியவைகளுக்குக் கட்டுப்பட்டு அங்கத்தினராகச் சேர சம்மதிக்கிறேன்" என்று எழுதி விலாசத்துடன் உங்கள் கையெழுத்தைப் போட்டு சரியான முகவரி எழுதி கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிவையுங்கள். ஒரு கார்டில் ஒருவர்க்கு மேல் கையெழுத்துச் செய்யலாம் ஆனால் விலாசம் தெளிவாய் எழுதவேண்டும். இதுவே கிராமத்தில் இருக்கிறவர்கள் செய்ய வேண்டிய வேலை.

மெம்பர்கள் சேர்க்க ஆளில்லாத இடத்தில் உள்ளவர்கள் செய்ய வேண்டிய முதல் வேலையும் இதுவேயாகும். இதைச் செய்து விட்டு ரசீது புத்தகத்திற்கு எழுதுங்கள். தமிழ்நாடு முழுவதும் இந்த ஒரு வாரத்தில் ஒரு ஆயிரம் கார்டாவது வருமா? எங்கே பார்க்கலாம்.

குறிப்பு: ரிப்ளை (Reply) கார்டாக அனுப்பினால் அந்த ரிப்ளையில் அங்கத்தினராகச் சேர்த்த ரசீது அனுப்பப்படும்.

தலைமை நிலையம், திராவிடர் கழகம், ஈரோடு.

ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

யும் சந்தேகப்பட்டு உள்ளே விடாமல் செய்து, பத்திரிக்கைகாரர்களையும் விட்ட சேர்க்காமல் விரட்டி அடித்துவிட்டு, உள்ளுக்குள்ளாகவும் தலைவர் பேச்சு ஒரு விதம், மற்றவர்கள் பேச்சு ஒரு விதம், ஒருவருக்கொருவர் வாய்ச் சண்டை, வெளியில் சங்கதி தெரிந்துவிடுமோ என்ற பயத்துடன் பாரா வைத்து கலைந்தேகிய பின், எங்கோ யாரோ தீர்மானம் தயார் செய்து,நம் எதிரிகளின் பத்திரிக்கைகளை தஞ்சமடைந்து அதில் விளம்பரம் செய்யப்பட்டால், அந்த நடவடிக்கைகள் எவ்வளவு தூரம் ஜனநாயகம்? எந்த அளவுக்கு ஜனநாயகம்! என்பதை பொது மக்களும் பெரியாரை சர்வாதிகாரி என்று சொல்லும் ஜனநாயகப் பிரியர்களும் சிந்தித்துப் பார்ப்பார்களாக

ஜஸ்டிஸ் கட்சித் தோழர்களே, சுயநலக்காரர்கள் தொல்லை எந்த இயக்கத்துக்கும் உண்டு; தலைவன் சரியான மனிதனாயிருந்தால் அத் தொல்லைகள் இயக்கத்தை ஒன்றும் செய்துவிட முடியாது என்பதோடு இயக்கத்தில் உள்ள மக்கள் ஒழுங்கானவர்களாகவும் சுயநலமற்ற கண்களோடு எதையும் பரிசீலனை செய்து பார்ப்பவர்களாகவும் உண்மையான கவலை கொண்டவர்களாகவும் இருந்தால் இயக்கத்தை சிறிதும் அசைத்துவிட முடியாது.

ஆகவே உங்கள் கடமை என்ன? மாநாடு நடந்து ஒருமாதமாகி விட்டது; 6500 மெம்பர்கள் இரசீது கொண்டதான சுமார் 250 புத்தகங்கள் கேட்கப்பட்டு அனுப்பப் பட்டிருக்கின்றன. ஆனால் இதுவரை 2000 அங்கத்தினர்களுக்குள்ளாகவும் 40 கழகங்களுக்குள்ளாகவும் தான் முறையே சேர்க்கப்பட்டும் அமைக்கப்பட்டுமிருப்பதாக தகவல் வந்திருக்கிறது. இது போதாது! போதாது!! போதாது!!!

திருச்சியில் 350 மெம்பரும், கரூரில் 250 மெம்பரும் சேர்க்கப்பட்டாய் விட்டது.

எங்கே—மற்ற இடங்களைப் பார்க்கலாம்.

ரோஜா முத்தையா

## பெரியார் ஈ. வெ. ரா. சுற்றுப்பிரயாணம்.

பெரியார் ஈ. வெ. ராவின் இவ்வாரம் சுற்றுப் பிரயாண விபரம்.

24-9-44—கரூர் (திராவிடர் மாநாடு)

25-9-44—பாபநாசம், (திராவிடர் கழகத் திறப்பு)

26-9-44 } தஞ்சை (மாவட்ட
27-9-44 } திராவிட மாணவர்மாநாடு)

28-9-44—பிரயாணம்.

29-9-44 திருச்சி தோழர் டி. பி. வேதாச்சலம் அவர்கள் வீட்டில் பெரியாரை டாக்டர் மூஞ்சே, டாக்டர் வரதராஜுலு சந்திப்பார்கள்.

1-10-44—கோவை (சு. ம. மாநாடு) முதலிய இடங்களுக்குச் செல்லுவார்.

## இராசிபுரம், நாமக்கல் தாலூகா

28-9-44 வியாழக்கிழமை காலை 8 மணிக்கு இராசிபுரம் ஓரியண்டல் தியேட்டரில் நடைபெறும்.

மாஜிமந்திரி கனம் ஆர். எம். பாலாட் எம். ஏ., பார்-அட்-லா எம். எல். ஸி., அவர்கள் தலைமையில் நடைபெறும்.

தோழர்கள் பெரியார் ஈ. வெ. ரா., பழயகோட்டை என். அர்ச்சுனன், டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு, டாக்டர் பி. எஸ். மூஞ்சே, கல்கத்தா டாக்டர் ஷியாம் பிரசாத் மூக்கர்ஜி, கே. ஏ. பி. விசுவநாதம், அ. பொன்னம்பலனார், ஜி. டி. நாயுடு, ஜே. எஸ். கண்ணப்பர், எஸ். தர்மலிங்க முதலியார் முதலிய அநேக பிரபல தலைவர்களும் மாநாட்டில் கலந்துகொள்வார்கள்.

இப்படிக்கு,
G. P. சோமசுந்தரம்,
வரவேற்புக் கமிட்டி தலைவர்.

## அண்ணாதுரை பொன்மலை வருகை

பொன்மலை
திராவிட வாலிபர் கழகம்

ஷை கழகத்தின் 4-வது ஆண்டு நிறைவு விழா 25-9-44ல் திங்கள் மாலை 6-30 மணிக்கு தேவி ஸ்டோருக்கு பக்கத்தில் தோழர் இரா. நெடுஞ்செழியன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் பி. ஜனார்த்தனன், அண்ணாதுரை முதலியவர்கள் பேசுவார்கள்.

## டாக்டர் மூஞ்சே பெரியார் சந்திப்பு

இந்து மகாசபை தலைவர்களான டாக்டர் மூஞ்சே அவர்களும், டாக்டர் ஷியாம்பிரசாத் மூக்கர்ஜி அவர்களும் பெரியார் ஈ. வெ. ராமசாமியும் சந்தித்து பேசவேண்டுமென்று டாக்டர் வரதராஜுலு நாயுடு அவர்கள் ஆசைப்படுவதாகவும் எங்கு எப்போது சந்திக்க சௌகரியப்படுமென்றும், டாக்டர் நாயுடு இடமிருந்து பெரியாருக்கு 19-9-44-ம் தேதி ஒரு கடிதம் வந்திருக்கிறது. அதற்கு உடம்பிலாத பெரியாரால் 29ம் தேதியில் ஈரோட்டிலாவது, திருச்சியிலாவது சந்திக்க மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன் என்று பதில் எழுதப்பட்டதற்கு, திருச்சிக்கு வந்து சந்திப்பதாக பதில் வந்திருக்கிறது. எனவே பெரியாரை டாக்டர் மூஞ்சே அவர்கள் 29ந் தேதி திருச்சி தோழர் வேதாசலம் அவர்கள் வீட்டில் டாக்டர் வரதராஜுலுநாயுடுகாருடன் சந்திப்பார்.

## மாணவத் தோழர்களுக்கு வேண்டுகோள்

மாணவத் தோழர்களே!

ஆங்காங்குள்ள பல தோழர்கள் மாகாண மாநாடு ஒன்று கூட்ட முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கடிதம் எழுதி வருகிறார்கள். அதற்குத் துணை செய்ய இன்னும் ஒரு மாதத்திற்குள் பல திராவிட மாணவர் கழகங்கள் நிறுவி ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு "திராவிட மாணவர் மாவட்ட மாநாடு" நடத்திவிட்டால் பின் நாம் ஒரு மாத முயற்சியில் மாகாண மாநாடு நடத்தலாம்.

திராவிட மாணவர்களுள் ஒற்றுமை மாகாணம் முற்றும் உள்ளது என்று காட்ட இதுவே நல்ல தருணமாய் இருப்பதால் 'தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றம்' என்ற பெயரில் உள்ள மன்றத்திற்கு 'திராவிட மாணவர் கழகம்" என்று பெயர் மாற்றவேண்டுமென்று தோழர் சி. என். அண்ணாதுரை தலைமையில் ஈரோட்டில் நடந்த திராவிட இளைஞர் மாநாட்டில் நிறைவேற்றிய தீர்மானப்படி பெயர்களை சீக்கிரமே மாற்றியமைக்கவும் மற்றும் திராவிட மாணவர் கழகமென்ற பெயரிலே கழகம் நடத்துவோர் குடந்தையை தலையிடமாய்க் கொண்டு அதற்குத் தகவல் கொடுக்குமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

தங்களன்புள்ள,
எஸ். தவமணி இராசன்,
தலைவர், திராவிட மாணவர் கழகம்,
குடந்தை.

# திருவண்ணாமலை கோவில் வழக்கு

திருவண்ணாமலை, செப். 16-
ஆசிரியர், 'குடி அரசு' ஈரோடு.
அன்புடையீர்,

இன்றைய தினம் வெளிவந்துள்ள 'சுதேசமித்திரன்' 'தினமணி' 'தினசரி' பத்திரிக்கைகளின் 9-5 பக்கங்களில் திருவண்ணாமலை அர்த்த மண்டப வழக்கின் விவரமும் ஜில்லா முனிசிப் தோழர் ஜீ. கெ. தாமோதரராவ் பி. ஏ., பி. எல்., அவர்கள் கூறிய தீர்ப்பு விவரமும் பொது ஜனங்களின் மதியில் தவறான அபிப்பிராயத்தை உண்டுபண்ணக் கூடியவையாயிருக்கின்றன. தர்மகர்த்தாக்களில் ஒருவரான தோழர் எஸ். முத்துக்குமாரசாமி முதலியாரின் சார்பாய் எதிர்வாதம் செய்த நான் பிராமணர்கள் கோரிய பரிகாரம், கோர்ட்டாரின் தீர்ப்பு விபரம் ஆகியவைகளைப் பொது ஜனங்களுக்கு விளக்கும் பொருட்டு இதை எழுதுகிறேன். தாங்கள் இதை அப்படியே பிரசுரம் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பிராமணர்கள் (வாதிகள்) தாங்கள் மட்டும் (அதாவது இதர ஜாதி ஹிந்துக்கள் நீங்கலாக) அர்த்த மண்டபத்துக்குள் சென்று தரிசிக்க ஏகதேசபாத்தியதையுடையவர்கள் என்று ஸ்தாபிதம் செய்யவும், தர்மகர்த்தாக்கள் மீது அவ்வாறே தாங்கள் தங்கள் உரிமைப்படித் தரிசனம் செய்து வருவதைத் தடை செய்யாமல் இருக்கும் பொருட்டு சாஸ்வத தடையுத்தரவு பெறவும் தாவா செய்து தற்காலிக தடையுத்தரவு பெற்றதும், அப்பால் ஷை தடையுத்தரவில் ஜில்லா ஜட்ஜ் ஏ. எஸ். பஞ்சாபகேச அய்யர் அவர்கள் எம். ஏ., ஐ. சி. எஸ்., பார்ட்லா., "இதர ஜாதி இந்துக்கள் நீங்கலாக" என்றிருந்ததை எடுத்துவிட்டு ஒரு திருத்தம் செய்து வழங்கியதும் நேயர்களுக்கு ஞாபகம் இருக்கலாம்.

முடிவாக ஜில்லாமுன்சிப் தீர்ப்பில் தாவா, கோவில் காமிகஆகம விதிகள்படி கட்டப்பட்டுள்ளதென்றும், ஷை ஆகம விதிப்படியும் மற்றும் ஹிந்து சாஸ்திரப்படியும் M. L. J. [illegible] சென்னை உயர்மன்றத்து நீதிபதி சதாசிவ அய்யருடைய தீர்ப்பை அனுசரித்தும், பிராமணர் மட்டும் அர்த்த மண்டபத்துள் சேவிக்கலாம், இதரர்கள் கூடாது என்பதற்குத் தனிப்பட்ட ஆதாரம் இல்லையென்றும், தபஸ்விகள், சந்நியாசிகள், யாகம் செய்தவர்கள் ஆகியவர்கள் முகமண்டபத்தில் இருந்து சேவிக்கலாமென்றும், அஃதேபோல் மகாவிரதர்கள், பாசுபதர்கள், சாகதர்கள், சாம்பவர்கள், ஆகியோரும் அர்த்தமண்டபத்தில் இருந்து சேவிக்கலாம் என்றும் ஷையோர் எல்லா ஜாதியிலும் இருக்கிறார்கள் என்றும், இதற்கு மகாமகோபாத்யாய தக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதய்யரவர்களின் மேற்பார்வையில் பதிப்பித்துள்ள மதுரைத் தமிழ்ப் பேரகராதி தரும் சான்று பகர்கின்றதென்றும், அவ்வாறே க்ஷத்திரியர், வைசியர் துவார மண்டபத்தில் நின்று தரிசிக்கும் உரிமை பெற்றவர்கள் என்றும், ஷை முக, துவார மண்டபங்கள் அர்த்த மண்டபத்தின் பகுதிகள் என்றும், சிவ தீட்சை பெற்ற ஒரு ஹரிஜனன் கூட பிரம்ம சிரேஷ்டனாகிறானென்றும், அத்தகையவன் அர்த்த மண்டபத்தில் இருந்து தரிசிக்க உரிமையுடையவனென்றும் பதிதர்களும், சிவத்வேஷிகளும் ஈசுவர திருஷ்டியிலேயே படவாகாதென்றும் P. W 4 ஏ ஒப்புக்கொண்டிருக்கிறார் என்றும், எனவே ஆகம சாஸ்திரப்படி பிராமணர்கள் கோரியுள்ள ஏக


## புரட்சிக்கவிஞரின் புதிய நூல்கள்!

1. காதல் நினைவுகள் — 0-12-0
(கவிஞரின் ஒப்பற்ற காதற் சித்திரங்கள், நம் வழியாகப் பெருகவிட்ட தேனூற்று. அழகான பல வர்ணப்பதிப்பு)

2. நல்ல தீர்ப்பு — 0-9-0
(வற்றாத சொற்சுவையும் குன்றாத அழகும் நிறைந்த உன்னத நாடகம்)

3. அழகின் சிரிப்பு — 1-0-0
(பாடல்கள் அனைத்தும் இயற்கைச் சித்திரங்கள். பாடல்களின் அழகு நம்மை அப்படியே சிரிக்கவைக்கின்றன)

4. இருண்ட வீடு — 1-0-0
(கல்வியற்ற ஒரு குடும்பத்தின் நகைச்சுவையான வரலாறு)

5. இசையமுது — 1-4-0
(உணர்ச்சியான சுவை சிரப்பிய இசைப் பாடல்கள்)

அச்சிலுள்ளவை!

பாண்டியன் பரிசு
(உயர்ந்த பெரிய காவியம்)

எதிர்பாராத முத்தம்
(அருமையான காதல் நிகழ்ச்சி)

கவிஞர், தலைவர், தளபதி இவர்களின் அழகிய படங்கள் தனித்தனி இரண்டணா.

முல்லைப் பதிப்பகம்,
தபால்பெட்டி 374
பிராட்வே, சென்னை.


ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

தேச பாத்தியதை மறுக்கப்பட்டிருக்கிறதென்றும், ஆனால் இது வரையும் எவ்வாறோ பிராமணர்கள் மட்டும் இந்தக் கோவிலில் அர்த்த மண்டபத்தில் தரிசித்து வந்திருக்கிறார்கள் என்று தாம் ஒப்புவதாயும், ஆயினும் வெறும் வழக்கத்தை ஒட்டி மட்டும்தான் இந்த தாவாவில் பிராமணர்களின் ஏகதேச பாத்தியதையை அங்கீகரிப்பதற்கில்லை என்றும், ஏனெனில் பெரும்பாலான பிராமணரல்லாத மக்கள் இந்த தாவாவில் பார்ட்டிகளாக இல்லாதிருக்கையில் அவர்களுக்கு உரிமையில்லையென்று தான் கூறமுடியாதென்றும், மேற்கண்டவாறு இதற்கு முன் ஜில்லா முன்சீப்பாயிருந்த தோழர் ரங்கநாதன் செட்டியார் அவர்கள் பி. ஏ., பி. எல்; Issue (a) ல் அடங்கியுள்ள பிராமணரல்லாத ஹிந்துக்கள் நீங்கலாகப் பிராமணர்கள் மட்டும் அர்த்த மண்டபத்திற்குள் பிரவேசிக்கலாமா? என்கிற தலைப்பில் தான் தீர்ப்புக் கொடுக்க மறுப்பதாயும் மேற்படி பிரச்சினையில் வாதிகளுக்கு விரோதமாக finding கொடுத்திருக்க அதற்கு விருத்தமாகத் தான் ஒன்றும் செய்வதற்கில்லையென்றும் கூறித் தொடர்ந்தாற்போல், முடிவாக இந்த தாவாவில் பிராமணர்கள் மட்டும் அர்த்த மண்டபம் போகலாம் இதரர்கள் போகக்கூடாது என்று கோரியுள்ள ஏகதேச பாத்தியதை மறுக்கப்பட்டிருக்கிறது என்றும், ஆனால் பிராமணர்கள் போகலாம் என்ற மட்டும் டிகிரியும் அனுமதி தடையுத்தரவும் பிறப்பித்திருப்பதாயும், வாதிகள் முழுஜெயம் பெறாதபடியால் உபயவாதிகள் தாவா செலவை அவரவர்களே வகித்துக் கொள்ளவேண்டும் என்று கூறி முடித்தார்.

தங்கள் உண்மையுள்ள,

எஸ். ரங்காச்சாரி.

(ஜட்ஜிமெண்ட் சுருக்கம் பின்னால் வரும்)

## பிறப்பு

சாக்கோட்டை தோழர் வைரத்தம்மாள்—எஸ். ஆர். சாமி அவர்களுக்கு 7-9-44-ல் ஓர் பெண் குழந்தை செண்ட் ஆன்ஸ் ஆஸ்பத்திரியில் பிறந்து தாயும் சேயும் சுகமாயுள்ளனர்.

## பாபநாசத்திற்கு பெரியார் வருகை

### திராவிடர் கழகத் திறப்பு

பாபநாசம்: 25-9-44-ஆந் தேதி திங்கட்கிழமை, இவ்வூரில் பெரியார் தலைமையில் 'திராவிடர்கழக' ஆரம்ப விழாவும் அன்று மாலை பொதுக் கூட்டமும் நடைபெறும்.

ஒலிபெருக்கி உண்டு.

## பெரியார் ஈ. வெ. ரா. பிறந்த நாள்

பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்களின் 66 வது பிறந்த நாள் திருச்சி, நாகப்பட்டணம், கரூங்குளம், கூடலூர், கரூர், கோபி செட்டிபாளையம், சிறுகனூர், திருச்செங்கோடு, அருப்புக்கோட்டை, சென்னை திருவல்லிக்கேணி, சின்ன சேலம், வாடிப்பட்டி, திருச்சி, பீமநகர், கோனாபட்டு, தஞ்சை, திருவையாறு, ஆத்தூர்கூடி, தாராசுரம், திருவண்ணாமலை, பூந்தோட்டம், சலகண்டபுரம், ஓடாக்கநல்லூர், திருப்பத்தூர் (RD), கிரவி, நாமக்கல், கட்டிபாளையம், கண்டியூர் முதலிய பல ஊர்களில் விமரிசையாகக் கொண்டாடப்பட்டிருக்கிறது டன், மற்றும் பல கழகங்களிடமிருந்தும் ஏராளமான வாழ்த்துச் செய்திகள் வந்து குவிந்திருக்கின்றன. இடமின்மையால் எல்லாவற்றையும் வெளியிட முடியவில்லை. அடுத்த வார முதல் சுருக்கமாக வெளியிடப்படும். ஆ-ர்.

## விருதுநகர் தெ. இ. ந. உ. சங்கக் கூட்ட அழைப்பு

அன்புடையீர்! நாளது 24-9-44ந் தேதி இரவு 9-மணிக்கு N.P.S. ல் மேற்படி சங்கக் கூட்டம் நடைபெறும், அதுசமயம் "சேலம் மாநாடும் நமது கடமையும்" என்பதுபற்றி தோழர்கள் ஆ. வ. ப. ஆசைத்தம்பி, உலகிறைவன் ஆகியோர்கள் பேசுவர். சேலம் மாநாட்டின் தீர்மானங்களை ஒப்புக்கொண்டு S. I. L. F. என்ற பெயரை திராவிடர் கழகம் என்று மாற்றி, நிர்வாகிகள் தேர்தல் நடைபெறும். அனைவரும் வரும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தென்னிந்திய நலஉரிமை சங்கத்தார்.

## சீர்திருத்தத் திருமணம்

1-10-44-ஆந் தேதி ஞாயிற்றுக்கிழமை திருக்காட்டுப்பள்ளி நவீன டாக்கீஸ் தியேட்டரில் திருச்சி வழக்கறிஞர் தோழர் டி. பி. வேதாசலம் பி. ஏ., பி. எல்., அவர்கள் தலைமையில் தோழர் டி. வி. பிச்சையா அவர்களுக்கும் தோழர் ரெத்தினத்தம்மையாருக்கும் புரோகிதமற்ற திருமணம் நடைபெறும்.

## திராவிடர் கழகம் திறப்பு

உதகமண்டலம் சன்னும் ஊட்டியில் ஜஸ்டிஸ் கட்சி கிராம சபை மெம்பர் தோழர் வக்கீல் கிருஷ்ணசாமி அவர்கள் தலைமையில் திராவிடர் கழகம் திறக்கப்பட்டது.

தலைவர்: தோழர் கிருஷ்ணசாமி.
காரியதரிசி: ஜீவானி.

K. A. Mala's
Selvam Memorial Sports Club,
(Estd: 1941)
No 91, Monegar Choultry road,
Washermenpet, Madras.
DONATION RECEIPT
THE POOR BOYS' FREE NIGHT SCHOOL FUND
8 Annas 8

| | |
|---|---|
| 1st Prize | Rs. 50. |
| 2nd ,, | Rs. 30. |
| 3rd ,, | Rs. 20. |

Result on the 1st January 1945 at 6 P.M.
Tickets are available from the above Club.
Help the Poor Boys.

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

# திருமணங்கள்.

ஈரோடு: ஜவுளி,ஆயில் மில் சொந்தக்காரர் தோழர் மு. கோ. அக்கப்ப செட்டியார் குமாரத்தி தோழர் அமிர்தம் அம்மையாருக்கும் லேட் ரா. பழனியப்ப செட்டியார் குமாரன் தோழர் நாகப்பனுக்கும் 4-9-44-ஆம் தேதி மணமகள் இல்லத்தில் திருமணம் சிறப்பாக நடந்தது. மணமகள் தந்தையார் பெரிய செல்வவனாகயிருந்தும், திருமணம் அதிக ஆடம்பரச் செலவில்லாமல் சிக்கனமாக நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். ஷை திருமணத்தை முன்னிட்டு 'குடி அரசு' வளர்ச்சிக்கு ரூ. 25 அன்பளிக்கப்பட்டது.

*　　　*

ஈரோடு: திருப்பூர் ஜவுளி மில் சொந்தக்காரான லேட் பொன்னப்ப செட்டியார் குமாரத்தி தோழர் அங்கம்மாளுக்கும் இராசிபுரம் ஸ்ரீ பட்டக்காரர் மு. சுந்தரம் செட்டியார் குமாரன் தோழர் கந்தசாமிக்கும் ஈரோடு மணமகள் இல்லத்தில் 4-9-44-ஆம் தேதி திருமணம் நடந்தது. இத்திருமணமும் யாதொரு ஆடம்பரச் செலவுமில்லாமல் சிக்கன முறையில் நடந்தது.

*　　　*

கும்பகோணம்: தோழர் செல்லப்ப முதலியார் குமாரர் தோழர் மாரிமுத்துக்கும், திருபுவனம் தோழர் பெரியண்ண முதலியார் குமாரத்தி தோழர் காளியம்மாளுக்கும் மணமகன் இல்லத்தில் 15-9-44-ம் தேதி தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் தலைமையில் திருமணம் நடைபெற்றது. 'குடி அரசு'க்கு நன்கொடை ஒரு ரூபாய் அளிக்கப்பட்டது.

*　　　*

சென்னை: சென்னை வண்ணாரப்பேட்டை சிவசுப்ர விநாயகர் கோவில் கட்டிடத்தில் நாடார் முன்னேற்ற இளைஞர் கழக ஆதரவில் 13-9-44-ல் தோழர் ஆர். சிங்காரத்திற்கும் தோழர் லட்சுமி அம்மாளுக்கும் தோழர் என். சுப்பிரமணியம் தலைமையில் சீர்திருத்தத் திருமணம் நடைபெற்றது.

*　　　*

சிதம்பரம்: மாயவரம் நகராட்சி உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர் தோழர் த' இ. விருத்தகாசி அவர்களும் தோழுனர் ஆசிரியை தோழர் க. சாரதாம்பாள் அவர்களும் 12-9-44-ல் சிதம்பரத்தில் மணமகன் இல்லத்தில் தோழர் ரா. மு. மாணிக்கம் அவர்கள் முன்னிலையில் வாழ்க்கை ஒப்பந்தம் செய்து கொண்டனர். பல தோழர்கள் பேசிய பின்னர் 'குடி அரசு' 'திராவிடநாடு' ஆகிய பத்திரிகைகளுக்கு முறையே ஒரு ரூபாயும், சிதம்பரம் கழகத்துக்கு 3 ரூபாயும் நன்கொடையளிக்கப்பட்டது.

*　　　*

கும்பகோணம்: முத்தைய பிள்ளை மண்டபத்தில் தோழர்கள் எஸ். முத்துசாமி—மீனாட்சி ஆகியவர்களுக்கு 13-9-44-ல் தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் தலைமையில் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. பல தோழர்கள் பேசிய பின் 'குடி அரசு'க்கு ஒரு ரூபாய் நன்கொடையளிக்கப்பட்டது.

*　　　*

வாணியம்பாடி: காலஞ்சென்ற தோழர் வெ. சண்முக முதலியார் தனயனார் இளைய செல்வரும் வாணியம்பாடி நகர சபையின் உதவித் தலைவருமான தோழர் வி. எஸ். விசுவநாதம் அவர்களின் தம்பியுமான தோழர் ஈர. கோவிந்தசாமி என்னும் கண்ணன் அவர்களுக்கும் பெங்களூர் படைவீடு போர்ப்படை குத்தகையாளர் (Military Contracter) தோழர் தங்கவேல் முதலியாரின் மகள் தோழர் சரோசா என்னும் மலர்க்கொடியாருக்கும் 4-9-44-ல் சென்னை தோழர் திரு வி கலியாண சுந்தரனார் அவர்கள் தலைமையில் திருமணம் நடந்தது. ரிட்டையர்டு கல்வி அதிகாரி வேலூர் தோழர் சச்சிதானந்தம் பிள்ளை வாழ்க்கையின் நோக்கம் பற்றி பேசினார். மாலையில் தோழர் டி. எஸ். வெங்கட்ராமன் கோஷ்டியாரால் நல்லிசை விருந்தளிக்கப்பட்டது.

*　　　*

கீழவெளியூர்: தோழர்கள் பி. ஆறுமுகம் அவர்கட்கும் மாரியம்மாளுக்கும் 13-9-44-ல் புரோகிதமின்றி திருமணம் நிறைவேறியது. தோழர் எ. ரத்தினசாமி பேசினார்.

*　　　*

திருப்பத்தூர் (ராமனாதபுரம்): இவ்வூர் திராவிடர் கழகத் தலைவர் தோழர் சின்னத்துரை தலைமையில் செந்தமிழ்ப் பொது நிலைப் பள்ளியில் 13-9-44-ஆம் தோழர்கள் கண்ணகி-பெரியகருப்பன் வாழ்க்கை ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். இதன் நினைவாக 'குடி அரசு'க்கு ரூபாய் ஒன்று நன்கொடையளிக்கப்பட்டது.

*　　　*

தூத்துக்குடி: கீழ சண்முகபுரம் சர். ஏ. டி. பி. ஞாபகார்த்த வாசகசாலை அங்கத்தினரான தோழர் சி. ராமலிங்கத்திற்கும் ஷையூர் சண்முகநாடார் மகள் ராமுலட்சுமிக்கும் 13-9-44ம் தேதி தோழர் வி. எஸ். கோமதிநாயகம் தலைமையில், சீர்திருத்த திருமணம் நடைபெற்றது. பலர் பாராட்டிப் பேசினதுடன் வரவேற்புப் பத்திரங்களும் வாசித்தளிக்கப்பட்டன.

*　　　*

புதுவையில் வதியும் புத்துணர்வு மிக்கத் தோழர்களான தனிகாசலமும், ஆனந்தமும் சேர்க்காட்டில் 13-9-44ம் தேதி தோழர்கள் கண்ணம்பாளையும், பட்டம்மாளையும் முறையே வாழ்க்கைத் துணைவிகளாக ஏற்றுக்கொண்டனர். தங்களுக்கு வாழ்த்துக்கள் அனுப்பிய அனைவருக்கும் மணமக்கள் இதன் மூலம் தங்கள் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

*　　　*

G. கல்லுப்பட்டி: தோழர் அ. பூ. பெரியகருப்ப நாடார் குமாரன் தோழர் ஆறுமுகத்திற்கும் அய்யப்பநாயக்கன் பட்டி தோழர் ல. ஆ. வெள்ளைச்சாமி நாடார் குமாரத்தி செல்வத்தாயம்மாளுக்கும் மணமகன் இல்லத்தில் புரோகிதமின்றி திருமணம் நடைபெற்றது. இதன் நினைவாக 'குடிஅரசு'க்கு ரூ. 1, நன்கொடையளிக்கப்பட்டது.

*　　　*

தஞ்சை: தோழர் பி. வேணுகோபால் பி. ஏ., பி. எல்., அவர்கள் தலைமையில் பட்டுக்கோட்டைத் தோழர் கலியபெருமான் அவர்களின் இளையகுமாரர் அருணாசலத்திற்கும் தஞ்சைத்தோழர் துரைசாமி அவர்களின் குமாரத்தி சகுந்தலைக்கும் 13-9-44ல் சீர்திருத்தத்திருமணம் நடைபெற்றது.

*　　　*

கூடலூர்: தொண்டைமண்டல சைவ வேளாள மரபினர் மன்னார்குடி கு. இராசகோபால் முதலியாருக்கும் புதுவை சி. பட்டம்மையாருக்கும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தமிழ்ப் புலவர் தோழர் வெள்ளை வாரணர் தலைமையில் தமிழ்மணம் நடந்தேறியது. பல தோழர்கள் சீர்திருத்தத் திருமணம் பற்றி பேசினார்கள்.

*　　　*

அம்பலூர்: இவ்வூர் தோழர் எ. ராகவன் அவர்கள் குமாரத்திகள் ஜெயம்மாளும் சாரதாம்பாளும் கீழ் முருங்கை தோழர் துரைசாமி முதலியார்மகன் தோழர் கோவிந்தசாமியையும் குளிதிகை தோழர் கோவிந்தராஜி முதலியார் இளையதம்பி தோழர் ராமச்சந்திரனையும் முறையே 13-9-44ல் வாணியம்பாடியில் தோழர் டி. கரியகவுண்டர் அவர்கள் தலைமையில் வாழ்க்கைத் துணைவர்களாக ஏற்றுக்கொண்டார்கள். திருமணத்தை ஆதரித்துப்பல தோழர்கள் பேசினார்கள். 'குடி அரசு' 'திராவிட நாடு' ஆகிய பத்திரிகைகளுக்கு முறையே ஒரு ரூபாய் நன்கொடையளிக்கப்பட்டது.

*　　　*

புவனகிரி: 10-9-44ம் தேதி தோழர்கள் அஞ்சிலை—சிதம்பரம் வாழ்க்கை ஒப்பந்தம் தோழர் குருசாமி குஞ்சிதம் அம்மையார் தலைமையில் புவனகிரி தோழர் வ. சி. மயிலாசலம் அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. புவனகிரி திராவிடர் கழகத்தாரால் தலைவருக்கு வரவேற்புப் பத்திரம் அளிக்கப்பட்டது. தோழர் சச்சிதானந்தன் நன்றி கூறினார். இதன் நினைவாக 'குடி அரசு' 'திராவிடநாடு'

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

ஆகிய பத்திரிகைகளுக்கு முறையே ரூ. 1. நன்கொடையளிக்கப்பட்டது.

தோழர்கள் அஞ்சலை—சிதம்பரம் திருமண அழைப்பைப் பெற்று வரமுடியாமல் மணமக்களை வாழ்த்தியனுப்பிய வெளியூர் தோழர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் என தோழர் கே. சமநிவாசம் எழுதுகிறார்.

* *

அரசர்குளம்: நெல்லை மாவட்டம் அரசர்குளம் கிராமம் காலஞ்சென்ற தோழர் மாசானம் அவர்களின் குமாரரும் தோழர் சாமிதாசனின் சகோதரருமான தோழர் செங்கசாமிக்கும் மணையன்குளம் பெரிய மாசானம் குமாரத்தி வள்ளி அம்மாளுக்கும் 12-9-44-ஆம் தேதி மணமகன் இல்லத்தில் தி. ஜி. ஆதி திராவிட மகாஜன சங்கத்தின் தலைவர் தோழர் ஏ. பி. சண்முகம் அவர்களின் தலைமையில் தமிழ் முறைப்படி வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. பல தோழர்கள் மணமக்களைப் பாராட்டிப் பேசினர்.

* *

அருப்புக்கோட்டை: தோழர் மீனாக்ஷி நாடார் மகன் தோழர் பெரியசாமிக்கும் தோழர் மா. பெரிய கருப்ப நாடார் மகள் தோழர் சத்தியபாமா அம்மையாருக்கும் 13-9-44-ஆம் தேதி தோழர் சொ. ஆ. சொக்கலிங்க பாண்டியர் முன்னிலையில் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. அதுசமயம் ஒரு ஆண்டு 'குடி அரசு' இதழ்கள் புத்தகமாக பைண்டு செய்து தோழர் மீ. சனிப்பாண்டியனால் மணமகனுக்குப் பரிசாக வழங்கப்பட்டது. மணமகனால் 'குடி அரசு'க்கு ஒரு ரூபாய் நன்கொடையளிக்கப்பட்டது.

* *

சென்னை: மவுண்ட்ரோட்டுக்கடுத்த செட்டித்தோட்டம் அப்பாவு கிராமணி தெரு 42-வது எண்ணுள்ள வீட்டில் தோழர் பொ. நடேச நாயகருடைய தம்பி தோழர் கண்ணப்ப நாயகருக்கும், தோழர் தேவகி அம்மாளுக்கும் தோழர் ஏ. சி. பாலசுந்தர நாயகர் பி. ஏ., எல். டி., அவர்கள் தலைமையில் நடந்த திருமணத்தின் போது தோழர் நடேச நாயகரால் "குடி அரசு" பத்திரிகைக்கு ரூ. 1 நன்கொடை அளிக்கப்பட்டது.

* *

நாகலூர்: பாபநாசம் தாலூகா [illegible]ஊர் மணமகன் இல்லத்தில் கும்பகோணம் தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் முன்னிலையில் பட்டீஸ்வரம் தோழர் ஆதாமதிதி நாடார் புதல்வன் தோழர் பக்கிரிசாமிக்கும், நாகலூர் தோழர் தங்கசாமி நாடார் மகள் தோழர் அஞ்சலைக்கும் 25-8-44-ல் இல்வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. அதுபற்றி 'குடி அரசு' 'திராவிடநாடு' ஆகியவைகளுக்கு முறையே ரூ. 1 நன்கொடையளிக்கப்பட்டது.

* *

ஸ்ரீவில்லிப்புத்தூர்: தோழர் க. சி. ப. சங்கரலிங்க நாடார் குமாரன் கருஞ்சனைக்கும், இராஜபாளையம் தோழர் ஆ. சுந்தரலிங்க நாடார் குமாரத்தி தெய்வபாக்கியவதிக்கும் 4-9-44-ம் தேதி இராஜபாளையம் மணமகள் இல்லத்தில் நடந்த திருமணத்தை முன்னிட்டு 'குடி அரசு' வளர்ச்சிக்கு ரூ. 3 நன்கொடையளிக்கப்பட்டது.

* *

திருநெல்வேலி: நெல்லை தாலூகா தத்துக்கல்லில் தோழர் சுடலைமுத்து அவர்கள் மகன் தோழர் எஸ். கணபதிக்கும் ஷை தாலூகா செட்டியார்பட்டி தோழர் புதியவன் மகள் தோழர் ஆழ்வார் அம்மாளுக்கும் 4-9-44ல் சீர்திருத்தத் திருமணம் தோழர் எஸ். சுடலையாண்டி தலைமையில் நடைபெற்றது. 'குடி அரசு'க்கு ரூ. 1 நன்கொடை யளிக்கப்பட்டது.

* *

செம்பாறை: தோழர் கெ. கந்தசாமி நாடார் சகோதரர் குமாரர் தோழர் எஸ். ஸ்ரீனிவாசனுக்கும் செம்பாறை தோழர் ராமசாமி நாடார் மகள் பவுன்பாப்பம்மைக்கும் தோழர் கெ. ஏ. பி. விசுவநாதம் தலைமையில் 10-9-44ம் தேதி நடந்த திருமணத்தின் போது 'குடி அரசு' வளர்ச்சிக்கு ரூ.5 நன்கொடை யளிக்கப்பட்டது.

* *

பெண்ணாகடம்: கடலூர் தமிழ்ச் சங்கத் தலைவர் தோழர் அ. இரத்தின சபாபதி பிள்ளை பி. ஏ., பி. எல்., இளையவர் தோழர் சுப்ரமணியனுக்கும் திருச்சி மாவட்டத் தலைவர் தோழர் வெங்கடாசலம் பிள்ளை பி. ஏ., பி. எல்., எம். எல். ஏ., அவர்கள் குமாரத்தி சரஸ்வதிக்கும் பெண்ணாகடத்தில் திருமணம் சிறப்பாக நடந்தது. மணமக்களுக்கு வாழ்த்துப் பாக்களும் பரிசுகளும் வழங்கப்பட்டன.

* *

திருக்காட்டுப்பள்ளி: நவீன டாக்கீஸ் தியேட்டரில், 10-9-44-ஆம் தேதி மாலையில், செங்கமேடூர் தோழர் பொன்னனார் சுத்தில் வென்றார் அவர்கள் தலைமையில், தென்னங்குடி கிராம முனிசீப் தோழர் சரவண நாட்டார் அவர்கள் குமாரர் தென்னங்குடி தோழர் எஸ். கந்தசாமியவர்களுக்கும், இளங்காடு தோழர் முருகய்ய சேர்வாரயர் குமாரத்தி அரங்கநாயகி அவர்களுக்கும் சீர்திருத்தத் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

---

தூத்துக்குடி பிரின்ஸ் ஆப்வேல்ஸ் கிளப்பில் தோழர் எஸ். ஆர்டர் ஆபிரகாம் தலைமையில் "குடித்தர் பகுத்தறிவு கழகம்" ஒன்று திறக்கப்பட்டது.

## திருச்செங்கோடு திராவிடர் கழகம்

9-9-44 ஞாயிறு மாலை கழகக் கட்டடத்தில் கழகத் துணைத்தலைவர் தோழர் அண்ணாமலை அவர்கள் தலைமையில் அங்கத்தினர் பொதுக்கூட்டமொன்று நடந்தது. அதில் "சேலம் மாநாடும் அதன் தீர்மானங்களும்" என்பதைப் பற்றி தோழர்கள் டி. ஏ. கைலாசம், எஸ். கே. வரதராஜுலு, கே. பரமசிவம், உயிர்மணி, மஜீத்கான், வி. பொன்னுசாமி முதலியவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். பிறகு சேலம் மாநாட்டுத் தீர்மானங்களை முழுமனதுடன் இக்கூட்டம் ஆதரிக்கிறதென்றும், கழகத் திட்டமடங்கிய சிறு புத்தகமொன்று வெளியிட தலைவர் பெரியார் அவர்களை கேட்டுக் கொள்வதாகவும், அங்கத்தினர் புத்தகம் தருவித்தும், மண்டலத் தலைவர்களுடன் ஒத்துழைத்தும் அதிக அங்கத்தினர்களைச் சேர்க்கவேண்டுமெனவும், இதற்கென நியமித்த கமிட்டிக்கு காரியதரிசியாகத் தோழர் எஸ். கே. வரதராஜுலு அவர்களைத் தேர்ந்தெடுப்பதாகவும் பெரியார் பிறந்தநாள் விழா கொண்டாட வேண்டுமெனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### பிரிவுபசாரம்

பிறகு கழகத் தலைவர் ஆர். கே. ஆறுமுகம் அவர்கள் தலைமையில், இங்கிருந்து மாற்றி சேலம் போகும் தோழர் இன்பவேல் அவர்கட்கு சிற்றுண்டியும், பல தோழர்களால் பிரிவுபசார சொற்பொழிவும் ஆற்றிய பின் கூட்டம் இனிது முடிந்தது.

---

## அறிவித்தல்

"குடி அரசு" பத்திரிகை தேவையுள்ளோர் தங்களின் பெயர், விலாசங்களை தெளிவாக எழுதித் தெரிவித்தால் தங்களின் வாசஸ்தலங்களுக்கு நேரில் தரப்படும்.

A. K. Devadason & Co,
Sole Agents for Cylon,
90. St. Michaels Road,
Colpetty, Colombo.

## திராவிட ஏழை மாணவர் உதவி நிதி

நாகர்கோவில் திராவிட ஏழை மாணவர் கல்வி உதவி நிதிக்கு நன்கொடை வாக்களித்த தோழர்கள் தங்கள் தங்களின் தொகைகளைத் தந்து ஆதரிக்க வேண்டுகிறேன் என ஷை கழகக் காரியதரிசி தெரிவிக்கிறார்.

---

[illegible] and Published by [illegible] at the Tami[illegible] [illegible] Street, Erode